வெளியீட்டு எண் : 5
நவம்பர் 15ஆம் தேதி 2005ஆம் ஆண்டு

# அரசுசாரா நிறுவன தகவல் இதழ்

பி.பெ.வ.கூ. அரசுசாரா நிறுவன தகவல் மற்றும் ஆவண அலுவலகம்
No: 6, Chanda Sahib street, Pondicherry, 605 001. India.
Telephone: +91 413 520 0606 Fax: +91 413 520 0607
Email: infoinde@ader-france.org

தென்னிந்தியாவில் அதிகமான தொண்டு நிறுவனங்கள் இருப்பதால் அவைகளுக்கு உதவி செய்யும் பொருட்டு (ADER-ASSOCIATION POUR LE DEVELOPPEMENT ECONOMIQUE REGIONAL) அதாவது, பி.பொ.வ.கூ. (பிராந்திய பெருளாதார வளர்ச்சி கூட்டமைப்பு) என்ற ஒரு பிரஞ்சு தொண்டு நிறுவனமும் மற்றும் FDF-(LA FONDATION DE FRANCE) அதாவது, பி.த.ஸ். (பிரன்ச் தர்ம ஸ்தாபனம்) என்ற ஒரு பிரன்ச் தொண்டு நிறுவனமும் இணைந்து துவக்கிய அரசுசாரா நிறுவன தகவல் அலுவலகத்தை பி.பொ.வ.கூ. புதுவையில் நடத்திவருகிறது. இந்த அலுவலகம் சுனாமி சம்மந்தமான அனைத்து தகவல்களையும் பெற்று, தயார் செய்து தகவல் மடலாக மாதம் இரு முறை தமிழ், ஆங்கிலம் மற்றும் பிரன்ச் மொழிகளில் வெளியிடுகிறது.

## உள்ளடக்கம்

- **இரு வார செய்திகளின் தொகுப்பு**
  - பேரிடர் மேலாண்மை
  - மீனவ செய்திகள்
  - வாழ்வாதாரம்
  - ஊடகம்
  - பருவ மழை மற்றும் வெள்ளம்
  - மறுகட்டுமானம்
  - ஆய்வுகள்
- **புதிய ஆன்லைன் வளங்கள்**
- **நிகழ்வுகளின் பட்டியல்**

## இரு வார செய்திகளின் தொகுப்பு

வெள்ளம் மற்றும் மோசமான வானிலை நிரந்தர வீடு கட்டும் திட்டத்திற்கு தடையாக உள்ளது. கட்டுமான பொருட்களின் விலையுர்வு மற்றும் அவற்றை வழங்குவதில் தடங்கல். சுனாமி முதலாம் ஆண்டு நினைவிற்காக மேற்கொள்ளப்படும் பல திட்டங்களின் தாமதம் ஏற்படும் என்று தோன்றுகிறது.

மழையால் தற்காலிக குடியிருப்புகளில் வாழும் மக்களின் வாழ்க்கை மிகவும் கடினமாக உள்ளது. வெள்ளத்தால் கட்டுமான பணிகள் பாதிப்படைந்துள்ளது. நிரந்தர வீடு கட்டும் பணி தாமதாமாக நடப்பதால் திட்டமிட்ட காலத்தைக் காட்டிலும் அதிக நாட்கள் தேவைப்படுகின்றது.

அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்கள் தற்பொழுது தற்காலிக குடியிருப்பில் வசிப்பவர்களுக்கு நிவாரணம் மற்றும் நீரில் மூழ்கிய அல்லது சேதமடைந்த பயிர்கள் போன்றவற்றின் மீது கவனம் செலுத்தி வருகின்றன. எதிர்வரும் தேர்தல் கரணமாக தமிழ்நாடு மற்றும் புதுவையில் வெள்ள நிவாரணப்பணி நேர்மையாக நடைபெற்று வருகின்றன.

### பேரிடர் மேலாண்மை

*இந்தியாவில் பேரிடர் மேலாண்மை மையம் அமைக்கப்படுகிறது.*

தெற்காசிய நாடுகள் வியாழக்கிழமை அன்று இந்திய பேரிடர் மேலாண்மை மையத்தை அமைக்க ஒத்துக் கொண்டுள்ளன. இதன் மூலம் பேரழிவுகளான, சுனாமி, நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் போன்ற சீர்கேடுகளை இப்பகுதியில் சிறப்பாக கையாள முடியும்.

பங்களாதே தலைநகர் டாக்காவில் நவம்பர் மாதம் 12ஆம் தேதி நடந்த 13 ஆவது சார்க் உச்சி மாநாட்டிற்கு முன் தெற்காசிய அதிகாரிகளின் கூட்டத்தில் இவ்வொப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
ஆதாரம் : http://www.alertnet.org/thenews/newsdesk/DEL145945.htm

## மீனவ செய்திகள்

### கேரளா

*சுனாமிக்குப் பிறகு இந்தியப் பெருங்கடலில் பல்வேறு வகையான மீன் வகைகள் அதிகரித்துள்ளன.*

ஏறத்தாழ சுனாமி பேரலை தாக்கி ஒரு வருடத்திற்குப் பிறகு கேரள கடலோரப் பகுதியில் திடீரென்று அதிகரித்துள்ள சில வகையான மீன்களால் கடல் உணவு ஏற்றுமதியாளர்களும், மீனவர்களும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஏற்றுமதியாளர்கள் கூறும் போது சுனாமி மற்றும் திடீரென்று அதிகரித்துள்ள சில வகையான மீன்களுக்கும் தொடர்புள்ளது என்றனர். மீன் ஆராய்ச்சியாளர்கள் கூறும் போது இந்த முடிவுக்கு வரும் முன்னர் சீரான ஆய்வு நடத்தியிருக்க வேண்டும் என்றனர்.

அதிக அளவில் அதிகரித்துள்ள பப்பர் (Puffer) வகை மீன்கள் மீனவ சமுதாயத்தையே நிம்மதியிழக்கச்செய்தள்ளது. கேரள கடலோரப் பகுதியில் திடீரென அதிகரித்துள்ள இவ்வகை மீன்களால் தங்கள் வலைகள் விரைவில் பழுதடைந்து விடுகின்றன, என்று மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.
ஆதாரம் : http://www.gg2.net/viewnews.asp?nid=3230&tid=breaking_news&catid=Breaking%20News

### தமிழ்நாடு

*நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீனவர்களின் கைம்மாறு*

கடலூர் மாவட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்கள் ஒன்று சேர்ந்து பணம் திரட்டி ஜம்மு மற்றும் கா மீரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கம்பளி போர்வை வாங்கி அனுப்பியுள்ளனர். சுனாமிக்கு பிறகு கா மீரிலிருந்து பெற்ற உதவிக்குப் பதிலாக இந்த உதவி செய்யப்பட்டது.
ஆதாரம்:
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051104105327&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

## வாழ்வாதாரம்

*சுனாமியால் பாதித்த மீனவரல்லாத சமுதாயத்தினருக்கான திட்டம்*

அரசுடன் இணைந்து 15 மில்லியன் டாலர் அளவில் மீனவரல்லாத ஆனால் மீன்பிடிதொழிலைச் சார்ந்த சுனாமியால் பதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உத்தேச பாதித்த மாவட்டங்களில் முதலாம் ஆண்டு நினைவு நாளுக்கு முன்னதாக துவக்கப்படும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

இந்த திட்டம் நிராகரிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட சமுதாயத்தினருக்கு மட்டுமே கவனம் செலுத்தப்படும் கூலித்தொழிலாளர்கள், மீன் விற்பவர்கள் சிறு விவசாயிகள், கடல் சிப்பிகளை விற்பவர்கள், மற்றும் தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர்கள், பழங்குடியினர்கள் மற்றும் சுனாமியால் நேரடியாக அல்லது மறைமுகமாகப் பாதிக்கப்பட்வர்கள் இத்திட்டத்தின் மூலமாக பயன் அடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் 8 ஆண்டு காலம் வரை நீடிக்கும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் சந்தை தொடர்புகளை நிறுவுவது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாக இருக்கும். மீன் மற்றும் அது சம்மந்தமான பொருட்களை விற்பதற்கு மென்பொருள் உதவி வழங்கப்படும் மேலும் திறன் அடிப்படையிலான பயிற்சி மற்றும் திறன் மேம்படுத்துதல் போன்றவையும், இத்திட்டத்தின் கீழ் கிராம மக்களின் காப்புரிமை மற்றும் பேரிடர் நிதியும் வழங்கப்படும்.
ஆதாரம் : The New Indian Express 3-11-2005, Pondicherry Edition

## ஊடகம்

*சுனாமி நிதியில் ஊழல் குற்றச்சாட்டு*

இந்திய பொருங்கடலில் ஏற்பட்ட சுனாமி மிகப்பெரிய அளவில் நிதியுதவியைப் பெற்று தந்திருக்கிறது – 11மில்லியன் அமெரிக்க டாலருக்கு மேல் – ஆனால் அதிக அளவிலான பணம் வருகை, ஊழல் நடந்திருக்கும் வரலாற்றினால் தவறானவர்களிடம் போய் சேர்ந்திருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

ஆல்டர்நெட் (Alternet) தனது விசாரணையை ஒரு கட்டுரையாகவே வெளியிட்டுள்ளது. இது 3 பெரிதும் பாதித்த நாடுகளைச் சார்ந்தவையாகும் அவை இந்தியா, இந்தோனேஷியா மற்றும் இலங்கை
ஆதாரம் : http://www.alertnet.org/thefacts/reliefresources/11315551833.htm

## பருவமழை மற்றும் வெள்ளம்

*மழைபாதிப்பு மற்றும் வெள்ளம் – அதிகாரிகள் கண்காணிப்பு*

நாகப்பட்டிணம் மாவட்டத்தில் 7 தாலுக்காக்களில் துணை ஆட்சியர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். கீவலூர், வேதாரண்யம், திருக்குவளை, தரங்கம்பாடி, மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய தாலுக்காக்களில் கடுமையாக பெய்த வடகிழக்கு பருவ மழையினால் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் வெள்ள நிலைமை பற்றி அறிக்கை தாக்கல் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. சுனாமி பாதித் தமிழ்நாட்டில் வெள்ளப்பெருக்கு.

நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய கடலோர மாவட்டங்களில் இடைவிடாது பெய்தகன மழையினால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி தென்மேற்கு வங்காளவிரிகுடாவில் புயல் சின்னம் உருவாகியுள்ளது.

நவம்பர் 5 ஆம் தேதியிலிருந்து சுனாமியால் தற்காலிக குடியிருப்பில் வசிப்பவர்கள் 1, 50,000க்கும் மேற்பட்டோர் மற்றும் 90,000 பேர்கள் இவ்விரு மாவட்டத்திலும் தாழ்வான பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் கடந்த ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டு இன்னும் நிவாரணம் பெற்றுக் கொண்டு வருபவர்கள் ஆவார்கள்.

பல கிராமங்களில் அரசுசாரா நிறுவங்கள் சுனாமியால் பாதித்த மக்களுக்கு வீடுகட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் மழை நிவராணம் மற்றும் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். வடகிழக்கு பருவமழை துவங்கியதிலிருந்து இதுவரை மழை சம்மந்தமான விபத்துக்ளில் 147 பேர் உரிரிழந்துள்ளனர்.
ஆதாரம் : http://www.hindu.com/2005/11/06/stories/2005110607490300.htm
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051109132949&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051108112037&Page=9&Title=Chennai&Topic=0&
http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051111101019&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&

*கடலோரப்பகுதியில் சம்பா சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.*

இரண்டாயிரமாவது ஆண்டு துவங்கியதிலிருந்தே இயற்கை காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு ஆதாரவு கரம் நீட்டவில்லை குறிப்பாக நாகப்பட்டிணம் மாவட்டம் வறட்சி, மற்றும் வெள்ளத்திற்குப் பிறகு சுனாமியால்

பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது மழையின் காரணமாக கடும் சேதம் அடைந்துள்ளது. நவம்பர் 4 முதல் 9 வரை – 4 நாட்களுக்கு பெய்த கன மழையின் காரணமாக ஆயிரக்கான ஹெக்டேர் விவசாய நிலங்கள் பெறும்பாலும் நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. குறிப்பாக கடலோரப் பகுதியில் வாழும் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

தங்கள் விவசாய நிலத்தில் 15 முதல் 20 நாள்கள் வரையிலான இளம் பயிர்கள் மழையில் மூழ்கின. பல விவசாயிகளுக்கு ஐந்தாவது ஆண்டாக தொடர்ந்து விவசாயத் தொழில் பாதிக்கப்ட்டுள்ளது.
ஆதாரம் : http://www.hindu.com/2005/11/10/stories/2005111007100500.htm

*நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர்.*

ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ்நாட்டில் வெள்ள நிவராண உதவி வழங்கும் நிகழ்ச்சியின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர் சென்னையில் கல்லூரி கட்டிடத்திற்கு வெளியே நெரிசலில் சிக்கி 12 க்கும் மேற்பட்டோர்கள் படுகாயம் அடைந்தனர். மழையால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானோர் ஒரே சமயத்தில் பணம் மற்றும் உணவு வினியோகம் செய்யுமிடத்தில் குவிந்தனர். தொகுப்பு நிவரணம் வழங்க ஆரம்பித்து விட்டதாக வதந்தி பரவியதும் நெரிசல் ஏற்பட்டது என்று அதிகாரிகள் கூறினர்.
ஆதாரம் : http://news.bbc.co.uk/2/hi/south_asia/4414226.stm
ஆதாரம் : http://www.hindu.com/2005/11/07/stories/2005110707430400.htm

## மறுகட்டுமானம்

*நூற்றிற்க்கும் மேற்பட்ட சுனாமி தற்காலிக குடியிருப்புகள் எரிந்து சாம்பல் : உயிரிழப்பு எதுமில்லை*

நாகப்பட்டிணத்தில் நவம்பர் 1 ஆம் தேதி அன்று சுனாமியால் பாதிக்கப்ட்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகள் முழுவதும் எரிந்து சாம்பல். இச்சம்பவத்தில் அதிர் ட வசமாக உயிர்ச்சேதம் ஏதுமில்லை என்று காவல் துறையினர் தகவல். சிறுவன் ஒருவன் பட்டாசு கொளுத்தும் போது இத் தீவிபத்து நேர்ந்தது. பின் மற்ற கூரைகளுக்கும் மள மளவென தீ பரவியதாக காவல்துறையினர் தகவல் தந்தனர்.

அவ்விடத்தில் வசிக்கும் 400க்கும் மேற்பட்டவர்கள் வீடின்றி தவித்துக் கொண்டிருந்தனர். நிர்வாகம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 2000 ரூபாய், 5 கிலோ அரிசி 1 வேட்டி மற்றும் 1 சேலை உள்ளிட்ட தொகுப்பு நிவாரண பொருட்களை வழங்கியது. கடந்த ஜீன் மாதத்திலிருந்து இன்று வரை மூன்று முறை தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

மீண்டும் ஒரு முறை தற்காலிக குடியிருப்பு கட்டுவதற்கு சிறந்த பொருள் எதுவென்ற கேள்வி எழுந்துள்ளது. கீற்றினால் ஆன கூரை வெப்த்தைக் குறைக்கும் ஆனால் எளிதில் தீப்பிடிக்கும் தன்மை வாய்ந்து. இரண்டடுக்குகள் கொண்ட உலோகம் அல்லது சிமெண்ட் தகடுகள் சிறந்தது. ஆனால் விலை அதிகம்.
ஆதாரம்:http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051101221640&Page=T&Title=Southern+News+%2D+Tamil+Nadu&Topic=0&
http://www.hindu.com/2005/11/03/stories/2005110308750300.htm

*சுனாமியால் பாதிகக்கப்பட்வர்களுக்கு நில பற்றாக்குறை மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது.*

தமிழ்நாட்டில் கடலூர், நாகப்பட்டிணம் மற்றும் கன்னியாக்குமரி மவட்டங்களில் தனியார் நிலங்களின் விலை அதிகரிப்பு,நில பற்றக்குறை மற்றும் கடலோர ஒழுங்கு முறை பகுதியின் படி கடலோரத்தில் இருந்து 500 மீட்டர் தொலைவில் வீடுகட்ட வேண்டும் என்ற சட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்வர்களுக்கு வீடுகட்டுவதில் பெரிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

பல அரசு சாரா நிறுவனங்கள் வீடு கட்ட விருப்பம் தெரிவித்திருந்தாலும் மாவட்ட நிர்வாகம் மீனவர்கள் விரும்பும் இடத்தில் நிலத்தை பெறுவது கடினமாகவே உள்ளது. நாகப்பட்டிணம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மீனவர்கள் உப்பங்கழிகளுக்கு அருகாமையிலேயே தங்கள் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளனர். ஏனெனில் தங்கள் வீட்டிற்கு அருகாமையிலேயே படகுகளை கொண்டுவரலாம் என்று எண்ணுகின்றனர்.

ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IET20051108003830&Page=T&Title=Southern+News+%2D+

Tamil+Nadu&Topic=0&

## ஆய்வுகள்

*இன்னும் 50 ஆண்டுகளுக்கு சுனாமி ஏற்படாது : ஆய்வு*

தமிழ்நாட்டின் கடலோரப்பகுதியில் இன்னும் 50 ஆண்டுகளுக்கு சுனாமி வர வாய்ப்பில்லை என்று செய்திகளில் விரிவான ஆராய்ச்சி அறிக்கை வெளியாகியுள்ளது. ஏறத்தாழ, ரிக்டர் அளவு கோரிக்கை 9 ஆக சுமத்திரா தீவில் பதிவானதால், இப்பகுதியில் சுனாமி ஏற்ப்பட்டது. இருந்தபோதிலும் இது பேன்ற நில நடுக்கம் 50 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே நிகழும் என்ற ஆய்வு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வை பேரிடர் மேலாண்மைத்துறை மற்றும் பல ஆராய்ச்சி நிறுவனங்கள் இணைந்து வெளியிட்டுள்ளன. நில நடுக்கம் 7 மற்றும் 8 ரிக்டர் அளவில் ‘‘அவ்வப்போது பதிவாகிக் கொண்டிருந்தாலும் அதனால் சுனாமி ஏற்படாது’’. இந்த ஆராய்ச்சி, கடலோரத்தில் வசிக்கும் மக்களுக்கு மனஉறுதி கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.
ஆதாரம் : http://www.chennaionline.com/colnews/newsitem.asp?NEWSID=%7BBE28EF0B-9853-45A3-9B1E-CEC73F38B2FC%7D&CATEGORYNAME=National

*சுனாமிக்கு பிறகு மீன்பிடி குறைவு : ஆய்வு*

அரசுசாரா நிறுவனம் ஒருங்ககிணைப்பு மற்றும் வளமையத்தின் ஆய்வின்படி அதிகரித்து வரும் மீன்பிடி உபகரணங்கள் கண்ணாடி இழை படகுகள் சுனாமிக்கு பிறகு அரசுசார நிறுவனங்களினால் வழங்கப்பட்டது. இதன் விளைவாக மீன்பிடிக்கும் விதம் மற்றும் மீனவ சமூகத்தின் சமுதாய அமைப்பை மாற்றி இருக்கிறது. ஆற்காட்டுத்துறை மற்றும் தரங்கம்பாடி மீனவ சங்கங்கள் ஏப்ரல் மற்றும் மே மாதம் 2005 ஆம் ஆண்டிற்கு பிறகு மீன்பிடி தொழிலில் நீண்ட சரிவு ஏற்பட்டிருகிறது என்று குறிப்பபிடுகிறன.

இந்த ஆயிவில் குறிப்பிடுவது என்னவென்றால் சராசரி மாத மீன்பிடி ஏப்ரல் மாதத்தில் ஒரு கண்ணாடி இழை படகு ரூ 19,863 ஆக இருந்து ரூ 8,025 என ஆகஸ்டு மாதத்தில் குறைந்துள்ளது. ஒட்டுமொத்த சராசரியாக ஒரு மாதத்தில் மீன் பிடிக்க செல்லும் எண்ணிக்ககையும் குறைந்துள்ளது. குறைவான மீன்பிடி காரணமாக 50 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட படகுகள் கடற்கரை ஓரத்தில் காத்துக்கொண்டிருக்கின்றன.
ஆதாரம் : http://www.newindpress.com/NewsItems.asp?ID=IE920051112004202&Page=9&Title=Chennai&Topic=0&

## புதிய ஆன்லைன் வளங்கள்

- சென்னையில் நவம்பர் மாதம் 11ஆம் தேதி மீனவ சமூதாயத்தில் சுனாமிக்கு பிந்தைய புனரமைப்பு என்ற தலைப்பில் நடந்த தொழிற்கூடத்தின் முழுவிவரம் டிரைநெட் இணையதளத்தில் இடம் பெற்றிருக்கிறது. http://trinet.in/downloads/trinetfishrep.htm

- மத்திய அரசின் 2005 ஆம் ஆண்டின் பேரிடர் மேலாண்மை மசோதா பின்வரும் இணையதளத்தில் இடம் பெற்றிருக்கிறது.
http://www.tntrc.org/downloads/Disaster_Management_Bill_LV_2005.pdf

- சீட் (Seed) அரசுசாரா நிறுவனம் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணத்தில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் பேரிடர் சூழ்நிலையில் பெண்களின் பங்களிப்புக்கு அரசுசாரா நிறுவனங்கள், அரசு மேற்கொள்ளவேண்டிய கொள்கைகள் மற்றும் வழிகாட்டிகள் இடம் பெற்றுள்ளன.
http://www.disasterwatch.net/Brief/Seeds2005final.pdf


**மொழி பெயர்ப்பு**
திரு. ம. முருகானந்தம்
மின் அஞ்சல் : infoinde@ader-france.org

**இலக்கணம் மற்றும் பிழைதிருத்தம்**
திரு. மு. கணேசன்

**ஆக்கம்:**
திரு. ச. சோழன்
தொலைபேசி : 91–413–2601294
மின்அஞ்சல் : sozhan6@sify.com

## நிகழ்வுகளின் பட்டியல்

| நிகழ்வுகள் | அமைப்பாளர் | தேதி/ காலம் | இடம் |
|---|---|---|---|
| **Workshop:** “The Sphere Project - “Sphere in Humanitarian Practice” | RedR India<br>info@redrindia.org | 16-11-2005 | Trivandrum, India. |
| **Training:** Capacity building program on “Livelihoods Promotion and Market Development | **MART**<br>Contact R. Gopi Krishnan,<br>Ph: 044-55315594<br>mart_chennai@yahoo.co.in | 17-11-05 to 19-11-05 | Chennai, Tamil Nadu. |
| **Meeting**: Child Focused Meeting | **TNTRC**<br>anuradha.vidyasankar@tntrc.org | 18- 11-05 at 10.00 am | Tamil Nadu Tsunami Ressource Centre, Chennai. |
| **Seminar:** International Conference on Disaster Management and Trauma Counselling | Sudha Bhogle at<br>bangaloreuniversity@counsellor.com | 21-12-05 to 22-12-05 | Bangalore, Karnataka. |

## தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :

### புதுவை

| | |
|---|---|
| Laurent Tyers<br>Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 80458<br>Email : infoinde@ader-france.org | M. Muruganadam<br>Assistant Information Officer<br>Tel. +91 413 520 0606<br>Mobile : +91 98946 22240<br>Email : infoinde@ader-france.org |

### பிரான்சு

| | |
|---|---|
| **ADER** : Association pour le Développement Economique Régional<br>Gionata Simioni,<br>Programme Manager<br>31 Rue de Reuilly, 75012 Paris - France<br>Tel. +33 1 40 24 03 03<br>Fax: +33 1 40 24 09 77<br>Email: contact@ader-france.org | **Fondation de France**<br>Martin Spitz,<br>Programme Manager :<br>Email: martin.spitz@fdf.org<br>Estelle Hédouin,<br>Programme Information Manager:<br>Email: estelle.hedouin@fdf.org |